திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்:திரு.எம்.காந்திராஜ், B.COM, MBA

ந.க.எண்.5958/2024/எப்1 **நாள்.10.03.2025**

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாநகராட்சி – வார்டு எண்.01 – பிளாக் எண்.03, நகரளவு எண்.52/1A2, 52/3–ல், 1.85 ஏக்கர் – பரப்பு காலி நிலத்தை – குடியிருப்பு மனைகளாக – அபிவிருத்தி – செய்தல் – இறுதி ஒப்புதளித்து – உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. திருவண்ணாமலை மாவட்ட, நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநரின், தொழில்நுட்ப அனுமதி கடித எண்.OMZFQ8OY/2024/TCP/21.09.2024
2. M/S சவேரியா டெவலப்பர்ஸ், சுண்ணாம்புகார தெரு, திருவண்ணாமலை அவர்களின் விண்ணப்ப நாள்.24.10.2024.
3. திருவண்ணாமலை இணைசார்பதிவாளர் 2.நீ.அலுவலக தான ஆவணம் 3598/2024.
4. மாநகராட்சி பொறியாளர் அவர்களின் சான்று நாள்.20.02.2025
5. திருவண்ணாமலை மாநகராட்சி ரசீது எண்.040/TM6/1/24–25/0022054 நாள்.10.03.2025
6. திருவண்ணாமலை மாநகராட்சி மாமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.10.03.2025

=======

உத்தரவு:

திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதி, வார்டு எண்–01, பிளாக் எண்–03, நகரளவு எண். 52/1A2, 52/3–ல், 1.85 ஏக்கர் காலி நிலத்தை, குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்து விற்பனை செய்யும் நோக்கில், திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் தொழில் நுட்ப அனுமதியை பார்வை 1–ல் காணும் கடிதத்தில் பெற்று, இம்மாநகராட்சியின் இறுதி ஒப்புதல் வேண்டி, பார்வை 2–ல் காணும் விண்ணப்பத்தில் மனைப்பிரிவு உரிமையாளராகிய M/S சவேரியா டெவலப்பர்ஸ் நிறுவனம் விண்ணப்பம் செய்துள்ளது.

மேற்படி நிறுவனம், பார்வை 3–ல் காணும் திருவண்ணாமலை இணை சார்பதிவாளர் அலுவலக தான ஆவணம் மூலம், மேற்படி மனைப்பிரிவில், நகரமைப்பு உதவி இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட, சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை, தமிழக ஆளுநருக்காக, உதவி இயக்குநர், நகர ஊரமைப்பு,

திருவண்ணாமலை அவர்களின் பெயரில் தானம் செய்து, அசல் பத்திரங்களை ஒப்படைப்பு செய்துள்ளது.

பார்வை 4–ல் காணும் சான்றில், இம்மாநகராட்சிப் பொறியாளர் அவர்கள், மேற்படி மனைப்பிரிவில், மேற்படி நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட சாலைகள், வடிகால்கள், குடிநீர் வசதிகள், தெரு மின்விளக்கு கம்பங்கள் போன்ற அடிப்படை வசதிகள் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளதாக கோப்பில் சான்றளித்துள்ளார்கள்.

பார்வை 5–ல் காணும் இம்மாநகராட்சி கருவூல ரசீத்தில் ரூ.1,58,000/–ஐ (ஒரு லட்சத்து ஐம்பதிதெட்டாயிரம்) மனைப்பிரிவு அனுமதி கட்டணமாக M/S சவேரியா டெவலப்பர்ஸ் நிறுவனம் செலுத்தியுள்ளது. மேலும் பார்வை 6–ல் காணும் மன்றப் பொருளில், மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க 10/03/2025–ல் மாமன்றத் தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கி உள்ளார்கள்.

ஆகவே, திருவண்ணாமலை மாநகராட்சிப்பகுதி, வார்டு எண்–01, பிளாக் எண்–03, நகரளவு எண். 52/1A2, 52/3–ல், 1.85 ஏக்கர் காலி இடத்தை, 1 முதல் 46 வரையிலான 46 குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்து கொள்ள,பார்வை 1–ல் காணும், திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின், தொழில் நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
திருவண்ணாமலை மாநகராட்சி.

10/3/25

பெறுநர்:
M/S சவேரியா டெவலப்பர்ஸ்,
22/A, சுண்ணாம்பு கார தெரு,
திருவண்ணாமலை

நகல்:

1. இணை சார் பதிவாளர் எண்–1
   திருவண்ணாமலை
2. வட்டாட்சியர்
   திருவண்ணாமலை
3. வருவாய் ஆய்வாளர்
   திருவண்ணாமலை
4. The Chairman,
   Tamil Nadu Real Estate Regularity Authority.
   No.1A. CMDA Tower–II, 1st Floor,
   Ghandhi Irvin Bridge Road, Egmore
   Chennai – 600 008
5. கோப்புக்கு